www.tamilarangam.net

EELAKESARI
ஈழகேசரி
A TAMIL NEWSPAPER FROM LONDON
16.7.1993 — 7.8.1993

# வெளிநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் போகிறவர்களிடம் புலிகள் காசு கேட்கிறார்களா?

பிறந்து தவழ்ந்து நடந்து விழுந்து சொந்தங்களோடும் பந்தங்களோடும் வாழ்ந்த அந்த தாய் மண்ணுக்கு போகவேண்டும் என்று உங்களுக்கு ஆசையில்லையா? பயப்படாமல் போய்வரலாம் என்கிறார் அங்கு போய் வந்த பெண்மணி திருமதி கிரிஜா ஜெயரத்தினம்.

தனது தாயாருக்கு சுகயீனம் என்று செய்தி அறிந்ததும் தன் கணவரிடம் அனுமதி கேட்டார் கிரிஜா. 1965 ம் ஆண்டு லண்டனுக்கு வந்தவர் ஜெயரத்தினம். 1985 ம் ஆண்டு கிரிஜாவை மணம் முடித்தார்.

தன் தாயாருக்கு சுகயீனம் என்றால், தான் என்ன செய்வேன் என்று கணவர் சிந்தித்தார்.

தன் மனைவியின் விருப்பத்துக்கு சம்மதித்தார். மே 22ம் திகதி தன் இரு ஆண் குழந்தைகளையும் தன் கணவரிடம் கொடுத்துவிட்டு கொழும்புக்கு விமானத்தில் புறப்பட்டார்.

கொழும்பு சென்றடைந்த கிரிஜா அடுத்த நாள் திங்கட்கிழமை 24ம் திகதி தன் தம்பியார் ருத்திரகுமாரையும் கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணப் பயணத்தை ஆரம்பித்து விட்டார். கொழும்பு கோட்டை ரயில் நிலயத்திலிருந்து இரவு 11 மணிக்கு மெயில் ரயில் இவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் இவரது தம்பியார் கடந்த மூன்று ஆண்டுகளாக யாழ்ப்பாணம் செல்லவில்லை. கிரிஜாவுக்கு தனது 74 வயது தாயார் சரஸ்வதியையும் தன் தந்தையார் குமாரசாமி மாஸ்டரையும் பார்த்துவிட வேண்டும் என்ற நினைப்புத்தான் நெஞ்சமெல்லாம் நிறைந்து இருந்தது.

"இவ புறப்பட்டுப் போன பின்னர்தான் கனபேர் என்னை ஏசினார்கள். நாளைக்கு உன்ரை மனைவிக்கு ஒன்று நடந்தால் உனக்கென்ன? இந்தச் சின்னக் குஞ்சுகளுக்கு யார் இருக்கிறார்கள். தாய் இல்லாமல் அவர்கள் எப்படி வளர்வார்கள்" என்று இந்தப் பாணியில் என்னை குறை கூறினார்கள்.



பயங்கரமான தடைகளையும், உயிர் ஆபத்துக்களையும் கடந்து சென்று பெற்ற அன்னையை உயிரோடு பார்க்க வேண்டும், லண்டனில் இருக்கும் தன் கணவனிடமும் பெற்ற சிறு குழந்தைகளிடமும் திரும்பிச் சென்றுவிட வேண்டும் என்று ஆண்டவனிடம் பழியை போட்டுவிட்டுத்தான் இந்தப் பெரும் பயணத்தை ஆரம்பித்தார்.

லண்டன் பிரன்ட் கவுன்ஸிலில் வீடமைப்புப் பிரிவில் கடமையாற்றும் கிரிஜாவை அவர் கணவர் ஜெயரத்தினம் சகிதம் சந்தித்துப் பேசினேன்.

தாய் நாட்டுக்கு போகின்ற - பெற்ற தாயைப் பார்க்கத் துடிக்கின்ற ஒரு பெண்ணின் உணர்வுகளை கணவன் என்ற அதிகாரத்தைப் பயன் படுத்தி தடுப்பது முறையா? என்று என்னிடம் கேட்டார். கிரிஜா தன் பயணக்கதையை தொடர்ந்து சொன்னார்:

வவுனியாவுக்கு அடுத்துள்ள தாண்டிக்குளம் ரயில் நிலையத்தில் எமது ரயில் நின்றது. ஆயிரத்துக்கு மேலானவர்கள் அங்கு இறங்கினோம்.

## லண்டன் தமிழ் பெண்மணியின் அனுபவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாண்டிக் குளம் வரைதான் ரயில் செல்லுகின்றது. இப் பகுதி ராணுவ கட்டுப்பாட்டில் உள்ளது. ரயில் நிலயத்திலிருந்து தட்டிவான் மினிவான் போன்ற வற்றில் ரயில் நிலையத்திலிருந்து ஏறினோம். சிறிது தூரம் சென்றதும் ராணுவ சோதனை, பொலித்தீன் பைகள் அலுமினியப் பாத்திரங்கள் கற்பூரங்கள் போன்றவை இருக்கின்றனவா என்று துருவித் துருவி ஆராய்ந்தார்கள். எண்ணைக்குள் பொலித்தீன் மறைத்துக் கொண்டு செல்ல முயன்றதாக கூறி ஒருவர் படுமோசமாக தாக்கப் பட்டு இழுத்துச் செல்லப்பட்டார். பரிதாபமாக இருந்தது. அழுகை வந்தது.

25 யார் தூரம் சென்றதும் அரசுக்கு ஆதரவான தமிழ் குழுவின் இளைஞர்கள் நின்று கொண்டு எங்களுக்கு கட்டளை ஒன்றை பிறபித்தார்கள்.

"நீங்கள் வரிசையாக நின்று நாங்கள் சொல்லுகிற படி ஒத்துழைத்தால் நேரத்துக்கு உரிய இடத்தை சென்றடையலாம்"

இதுதான் தூய தமிழில் அவர்கள் இட்ட உத்தரவு. இரும்பு பாலம் ஒன்றை ஆயிரம் பேரளவில் நாங்கள் தனிக் கியூவில் சென்று கடந்தோம். நூறு யார் [illegible] சென்றதும் நூற்றுக்கணக்கான சைக்கிள்களை வைத்துக் கொண்டு எமக்காக பல தமிழ் இளைஞர்கள் காத்து நின்றார்கள். ஆள் ஒன்றுக்கு ஐம்பது ரூபாய். பின்னுக்கு சாமான் கொண்டு செல்ல 50 ரூபாய். அரை மைல் தூரம் சென்று இருப்போம். பாஸ் அலுவலகம்-

புலிகள் சோதனையிட்டு பாஸ்கள் வழங்குவார்கள். சின்ன சின்ன கொட்டில்கள் அழகாக அமைத்து புலி இளைஞர்களும் யுவதிகளும் எங்களை கேள்வி கேட்டு பாஸ் வழங்குவார்கள். பெண்களை பெண்களே கேள்வி கேட்டு பாஸ் வழங்குவார்கள். பாஸ் வழங்கும் கொட்டில்களில் பிரபாகரனின் படங்கள் மாட்டப்பட்டுள்ளன.

கியூவில் நிற்கும் போது, மாவீரர்கள் குடும்பம் நிற்கிறார்களா? போராளிகள் குடும்பத்தினர் யாராவது உண்டா? என்று கேட்பார்கள். அவர்கள் கியூவில் நிற்காமல் செல்லலாம். அவர்களுக்கு தமிழ் மண்ணில் முதல் இடம்.

"காட்டிக் கொடுத்தால் கற்பூரம் தருவார்கள் என்பதற்காக காட்டி கொடுத்துக் காக்கை வன்னியன் ஆவதா?" என்பது போன்ற உணர்ச்சி மயமான வாசகங்கள் அங்கு காணக் கூடியதாக இருந்தது. உள்ளத்தை தொட்டு உணர்வை தூண்டிவிடும் புலிகளின் தமிழ்ப்பாட்டுகள் மனதிலே பெரியதொரு நிம்மதியை தந்தது. தமிழ் ராச்சியம் ஒன்றுக்குள் வாழ்வது போன்ற உணர்வு ஏற்பட்டது.

கோப்பாய்க்கு பாஸ் எனக்கும் தம்பிக்கும் கிடைத்தது.

கொழும்பில் உள்ள பிரச்சனை குறித்தும் வெளிநாடு நிலை பற்றியும் இன்னொரு குழு பலரையும் பேட்டி கண்டு குறிப்பு எடுத்தது. அங்கிருந்து கிளிநொச்சிக்கு பஸ். ஆளுக்கு 200 ரூபாய். கிளிநொச்சியில் சேச் ஒன்றில் தங்க இடம் தரப்பட்டது. 25ம் தகதியிலிருந்து 31ம் திகதி வரை அங்கு தங்கினோம். காவல் துறை நன்றாக இயங்குகிறது. நீல நிற நீள காற்சட்டையும் நீல சட்டையும் யூனிபோம். அவசர கால தொடர்பு சேவை வசதி செய்யப்பட்டுள்ளது. படகு சேவை இல்லாததால் நாங்கள் இப்படி தங்க வேண்டி ஏற்பட்டது. அம்மா உடல் நிலை பற்றி அறிய அவசர சேவையை நாடினேன். மிக நேர்த்தியாக அடுத்த நாள் அம்மா உடல் நிலை ஒரளவு திருப்தி என்று பதில் தந்தார்கள். கடைகளில் சாப்பாடு வாங்கலாம். மலசல கூடவசதிக்கு [illegible] வேண்டி இருந்தது. இது எல்லாம் எனக்கு ஒரு கஸ்டமாகப் பட வில்லை.

1ம் திகதி அதே பஸ்சில் ஆலங்கேணி சென்றோம். ஆலங்கேணியில் இரண்டு வீடுகள் வாங்கினோம். அதில் தான் படுக்கை. பாம்பு தவளை போன்றவை இருப்பதாக எச்சரித்தார்கள். மலசல கூட வசதியில்லை. அரை மைல் தூரம் நடந்து சென்று கல் வீடு ஒன்றை அடைந்தேன். அங்கு மல சல கூட வசதி இல்லை என்றார்கள். ஒரு இடத்தைக்காட்டினார்கள். 2ம் திகதி டிராக்டரில் கிளாலி படகில் செல்ல சென்றோம். 200ரூபாய். படகுக்கு 200ரூபாய். கடலுக்குள் அரை மையில் நடக்க வேண்டும். பாதை வெட்டியிருக்கிறார்கள். இயந்திர படகு கட்டி இழுத்து சென்றது. நடுக் கடலில் இரண்டு கயிறு அறுந்து விட்டது. தேவாரம் பாடி கதறி அழுதோம். தப்பி கரை சேர்ந்தோம். இப்படியாக ஆயிரம் பேர் படகுகளில் வந்து சேர்ந்தோம். ஆட்டோ, மினி வான் நின்றது. கோப்பாய்க்கு நாங்கள் இருவரும் செல்ல ஒருவருக்கு 1400ரூபாய். நேராக எங்களை கொண்டுபோய் வீட்டுக்கு முன்னால் இறக்கி விட்டார்கள்.

மகிழ்ச்சியில் ஆனந்த கண்ணீர் விட்டேன். அம்மாவை ஆஸ்பத்திரியில் அனுமதித்து ஆப்பரேஸன் செய்து பின்னர் வீட்டுக்கு கொண்டு வந்து நான் புறப்பட இருந்த யூன் 10ம் திகதி அம்மா இறந்து விட்டா. அம்மாவின் இறுதிக்கிரியைகள் புலிகளின் உதவிகளோடு மிக நன்றாக நடந்து ஏறியது.

நான் கோப்பாய்க்கு வந்த போது எனது உறவினர்கள் பலரும் கேட்ட கேள்வி: வெளிநாட்டில் இருந்து வந்தனீங்கள். புலிகள் காசு கேட்க்கவில்லையா?

உண்மைதான்! நான் லண்டனில் இருந்து புறப்பட ஆயத்தம் ஆனபோது இந்த சந்தேகம் ஏற்பட்டது. நாங்கள் லண்டன் புலிகள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்தோம். சாந்தன் என்பவர் பதில் சொன்னார்: நீங்கள் போய் வந்து இங்குள்ள மக்களுக்கு உண்மையை சொல்லுங்கள். அப்போது தான் நம்புவார்கள்.

50ஆயிரம் 1லட்சம் என்று கேட்க்கிறார்கள் என்று தான் கேள்வி பட்டு இருக்கிறேன். ஆனால் என்னிடம் அவர்கள் ஒரு சல்லிக் காசுகூட கேட்க்கவில்லை. [illegible] நான் செய்தார்கள். 12ம் திகதி படகு சேவை இருப்பதாக அறிந்து உடனடியாக அம்மாவின் இறுதிக் கிரிகைகள் முடிந்ததும் புறப்பட்டு விட்டோம். யாழ்ப்பாணத்தின் ஆட்சி தமிழர்கள் கையில் இருப்பதை பார்த்த போது நமது மண்ணில் இருந்து விடுவோமா என்ற உணர்வு தான் ஏற்பட்டது. ஆனாலும் என் கணவர் குழந்தைகள் என்ற பந்தம் என்னை திரும்பவும் லண்டனுக்கு கொண்டு வந்து விட்டது.

**எத்தனை தான் சுகபோகம் இருந்தாலும் சொந்த மண்ணுக்கு இந்த வாழ்க்கை ஈடாகுமோ?**